தினகரன்
1.10.2017

க.பரமத்தி பகுதியில்

# கோமாரி நோய் தடுப்பூசி முகாம்



க.பரமத்தி ஒன்றியம் புன்னம் ஊராட்சி ஆலாம்பாளையத்தில் நடைபெற்ற கோமாரிநோய் தடுப்பூசி முகாமை காகித நிறுவன துணை பொதுமேலாளர் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம் பார்வையிட்டார்.

க.பரமத்தி,அக்.1: க.பரமத்தி பகுதியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

கரூர் டிஎன்பிஎல் தமது சமுதாய நலத்திட்டப்பணிகளில் ஒரு பகுதியாக,மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறையுடன் இணைந்துகடந்த19ம்தேதி முதல் துவங்கி 27ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பூசி முகாம் 9நாட்கள் நடைபெற்றது. காகித ஆலையை சுற்றியுள்ள 5ஊராட்சி மற்றும் பேரூராட்சிக்குட்பட்ட33கிராமங்களில்முகாம்நடத்தப்பட்டது.

முகாம்தொடக்கவிழாவில் காகிதஆலை மனிதவளத்துறைபொதுமேலாளர்பட்டாபிராமன்முன்னிலை வகித்தார். காகித நிறுவனசெயல்இயக்குநர் (இயக்கம்) வெங்கடராமகிருஷ்ணன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

முகாமில் குப்பம், புன்னம், தளவாபாளையம், பெரியகாளிபாளையம், வாங்கலை சேர்ந்த கால்நடைமருத்துவர்கள்தலைமையிலான நடமாடும் மருத்துவக்குழுவினர்பணியாற்றினர். சங்கரம்பாளையம்,மின்னாம்பள்ளி, அருவங்காட்டூர்,கருங்கல் காலனி, பஞ்சமாதேவி, சந்தனகாளிபாளையம், பஞ்சமாதேவிபுதூர்,பஞ்சமாதேவிகாளிபாளையம், ஈ.வெ.ரா.தெரு, சக்கரபாளையம்,துவரபாளையம், நல்லகுமாரபாளையம், கோம்புபாளையம், உள்ளிட்ட 33 கிராமங்களைச் சார்ந்த மொத்தம் 1806 கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி மற்றும் கால்நடை நோய் தடுப்பு மருந்துகள் மற்றும் மருத்துவஆலோசனைகள் வழங்கினர்.

முகாமினைகாகிதநிறுவனதுணைபொதுமேலாளர் (மனிதவளம்)டேவிட் மாணிக்கம் பார்வையிட்டார்.